## கிராமப்புறங்களில் மீண்டும் மினி பேருந்துகள் இயக்கப்படும்!

# ரூ.1,535 கோடியில் 3,000 புதிய பேருந்துகள்!

## போக்குவரத்துத் துறை மானியக் கோரிக்கையில் 17 அறிவிப்புகளை வெளியிட்டு - அமைச்சர் சா.சி.சிவசங்கர் பதிலுரை!

**சென்னை, ஜூன் 29- கிராமப்புறங்களில் மீண்டும் மினி பேருந்துகள் இயக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்றும் ரூ.1,535 கோடி மதிப்பீட்டில் புதிதாக மூவாயிரம் பேருந்துகள் வாங்கப்படும் என்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் பதிலுரையில் அறிவித்துள்ளார்.**

**இது குறித்து அவரது பதிலுரை வருமாறு:-**

பட்டுப் பூச்சிகளாய், புன்மைத் தேரைகளாய் இருந்த இந்த தமிழினத்தை சுயமரியாதை உள்ள இனமாக மாற்றி நம்மை எல்லாம் மனிதர்களாக நடமாட வைத்திருக்கின்ற ஐயா தந்தை பெரியார் அவர்களை வணங்குகிறேன். மேட்டுக்குடியும், பிராஸ்களும் கோலோச்சிய இந்த சபையில் டீ கடையில் வேலை செய்தவர்களையும், குதிரை வண்டி ஓட்டியவர்கள், சைக்கிள் கடையில் பணியாற்றியவர்களையும் கொண்டு வந்து உட்கார வைத்து இன்றைக்கு நாமும் இங்கே வருவதற்கு காரணமாக இருந்த பேரறிஞர் அண்ணாவை வணங்குகிறேன். சமூக நீதி என்றால் தலைவர் கலைஞர். தலைவர் கலைஞர் என்றால் சமூக நீதி. நவீன தமிழகத்தின் சிற்பி. இந்த தமிழகம் ஒரு மிகச் சிறந்த கட்டமைப்போடு இன்றைக்கு இந்தியாவில் சிறந்த மாநிலமாக விளங்குவதற்கு அவர் வடிவமைத்த திட்டங்கள்தான்.

அந்தத் திட்டங்கள் தமிழகத்தை வடிவமைத்தது மாத்திரமல்ல இந்த ஏற்றத்தாழ்வுகள் நிறைந்த சமூகத்தை ஒரு சமநிலையிலே கொண்டு வந்து நிறுத்திய சமூக நீதிக் கொள்கை. இட ஒதுக்கீட்டு கொள்கை அமல்படுத்தியவரும் அவர்தான். எல்லோருக்கும் எல்லாம் கிடைக்க வேண்டுமென்ற அந்த தத்துவத்தை ஒரு இலவச தொலைக்காட்சிகூட இல்லாத மிகமிக நலிந்த ஏழைக் குடும்பம் வீட்டிலே ஒரு

## இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் - அரசின் சார்பில் 20,000 பேருந்துகள் இயக்கப்படுகின்றன!

இலவச தொலைக்காட்சிப் பெட்டியை வைத்து எல்லோரும் சமம் என்கின்ற ஒரு நிலையைகொண்டுவந்த முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களை வணங்குகிறேன்.

இன்றைக்கு இந்தியாவில் மற்ற மாநிலங்கள் பின்பற்றுகின்ற திட்டங்களை எல்லாம் செயல்படுத்திக் கொண்டிருக்கின்ற காலை உணவுத் திட்டம், மகளிர் உரிமைத் தொகை, மகளிர் விடியல் பயணம், புதுமைப் பெண் திட்டம், தமிழ்ப் புதல்வன் திட்டம், நான் முதல்வன் திட்டம் என்று இந்தியாவிற்கு வழிகாட்டுகின்ற திட்டங்களை எல்லாம் வடிவமைத்து இந்தியாவிற்கு வழிகாட்டுகின்ற முதல்வராக மாத்திரமல்லாமல் வழிகாட்டுகின்ற தலைவராக நாடாளுமன்ற தேர்தலில் இந்தியாவிற்கு கடந்த தேர்தலில் அவர் காட்டிய வழிதான் இந்த தேர்தலில் இந்தியாவை ஒரு இக்கட்டான சூழலில் இருந்து காப்பாற்றி இருக்கிறது. மிருக பலத்தோடு வர வேண்டுமென்று நினைத்தவர்களை சுய பலத்தோடு ஆட்சி நடத்த முடியாத நிலைக்கு கொண்டு வந்து நிறுத்தியது நம்முடைய திராவிட மாடல் முதல்வருடைய கூட்டணி அமைப்புதான் இன்றைக்கு இந்தியா முழுவதும் பின்பற்றப்பட்டு இன்றைக்கு இந்த நிலை வந்திருக்கிறது. நற்றிணையில் கூறுவதைப்போல,

"நீர் **இன்று அமையா உலகம் போலத்**
தம் **இன்று** அமையா நம் நயந்தருளி"

என்று காதலன் காதலிக்கு சொல்வது. நாங்கள் எங்களுடைய தலைவருக்குச் சொல்கிறோம். அவர் இல்லாமல் நாங்கள், இந்த இயக்கம் இல்லை. இன்றைக்கு இந்த இயக்கம் பெற்றிருக்கின்ற வெற்றி, இந்த இயக்கத்தில் இருக்கின்றவர்கள் பெற்றிருக்கின்ற வெற்றி, திராவிட மாடல் முதல்வர் அவர்களுடைய வெற்றி. அவரை வணங்குகின்றேன்.

தந்தை பெரியாரில் துவங்கி திராவிட மாடல் முதல்வர் தலைவர் அவர்கள் வரை ஏந்தியிருக்கின்ற அந்த சுய மரியாதை, சமூக நீதி தீப்பந்தத்தை அடுத்த தலைமுறைக்கும் தொடர்ந்து ஏந்தி ஓடுவதற்கு தயாராக ஓடி வந்து கொண்டிருக்கின்ற ஏழை, எளிய மக்களை பாதிக்கின்ற அது நீட் தேர்வாக இருந்தாலும், புதிய கல்விக் கொள்கையாக இருந்தாலும் அவற்றிற்கெல்லாம் உடனுக்குடன் எதிர்வினை ஆற்றுகின்ற எங்களுடைய மாநில இளைஞரணிச் செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களை வணங்குகின்றேன். போக்குவரத்துத் துறையின் சாதனைகளை இன்றைக்கு திராவிட மாடல் முதல்வர் அவர்கள் இந்தத் துறை மிகச் சிறப்பாக இயங்குவதற்கு பல்வேறு திட்டங்களை வகுத்துக் கொடுத்திருக்கின்றார்கள்.

இந்தத் திட்டங்கள் மூலமாக சிறப்பாக இயங்குகின்ற துறையை சமீப காலமாக சிலர் குறிவைத்து தாக்கி வருகிறார்கள். ஆனால், இந்தத் துறை எப்படி இயங்குகிறது என்பதற்கு சமீபத்திலே ஒரு தொலைக்காட்சியிலே ஒளிபரப்பப்பட்ட ஒரு காட்சி துணுக்கு மிகச் சிறப்பாக அமைந்திருந்தது. மாஞ்சோலைக்கு இயங்கிக் கொண்டிருக்கின்ற அந்தப் பேருந்து எப்படி இயங்குகிறது என்பதை அதிலே காட்டினார்கள். இந்த அரசு, இந்தத் துறையினுடைய வெற்றியாக அதை எடுத்திருந்தாலும்கூட அவ்வளவு சிறப்பாக வந்திருக்குமா என்று தெரியவில்லை. புதிய தலைமுறை தொலைக்காட்சி மிகச் சிறப்பாக அந்தக் காட்சியின் மூலமாக வெளிப்படுத்தியிருந்தார்கள். மாஞ்சோலையிலே பணியாற்றுகின்ற அந்தத் தொழிலாளர்கள் அவர்களுடைய கருத்துகளை அதிலே வெளிப்படுத்தியிருந்தார்கள்.

அந்த estate-ல் பணியாற்றுகின்ற 600 குடும்பங்களைச் சார்ந்த தொழிலாளர்கள், "எங்களுக்கு இருக்கின்ற ஒரே ஆதாரம் இந்த அரசு போக்குவரத்துக் கழக பேருந்துகள்தான். இந்தப் பேருந்தில் பணியாற்றுகின்ற அனைவரும் எங்கள் குடும்பத்தில் ஒருவராக இருக்கிறார்கள்." என்பதை பேருந்து வந்து நிற்கின்றபோது அதை பேசுகின்றார், பேருந்து நிறுத்தத்தில் பயணிகள் இறங்குகிறார்கள். பயணிகள் இறங்கியபிறகு அதிலிருந்து ஒரு கடைக்காக கோழிகளை இறக்குகின்றார்கள். முட்டை வருகின்ற தட்டுகளை இறக்குகின்றார்கள். அடுத்து ஒருவர் சொல்கிறார். "இந்த estate-ல் நாங்கள் மாடுகள் வளர்க்க முடியாது. எங்களுக்கு பால் கிடைக்காது. அந்த பால் பாக்கெட்டுகளையும் எங்களுக்குக் கொண்டு வந்து சேர்ப்பது, இந்த அரசு போக்குவரத்துக் கழக பேருந்துகள்தான்." அத்துடன் அவர் நிறுத்தவில்லை. ஒரு பெண் சொல்கிறார். "எங்களுக்கு மருந்து வேண்டுமென்றால், நாங்கள் பேருந்துகளை இயக்குகின்ற நடத்துனர் மற்றும் ஓட்டுநர்களை அழைத்து சொல்வோம், அவர்கள் கீழேயிருந்து அந்த மருந்துகளை வாங்கி வந்து எங்களுக்குக் கொடுப்பார்கள். எங்கள் வீட்டு நிகழ்ச்சிகள் வந்தால் அவர்களுக்கு பத்திரிகை வைப்போம், அவர்கள் அனைவரும் எங்கள் வீட்டு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வார்கள். நாங்கள் தொடர்ந்து ஒரே பேருந்துகளில் வருபவர்கள், வராவிட்டால் அவர்கள் எங்களை அலைபேசிகளில் அழைத்து. நீங்கள் இன்னும் வரவில்லையா என்று கேட்பார்கள்" என்று சொல்கிறார்கள் என்றால், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தில் பணியாற்றுகின்றவர்கள் எந்தவகையில் மக்களுடன் இணைந்து பணியாற்றுகின்றார்கள், மக்களுக்காக பணியாற்றுகின்றார்கள் என்பது மிகத் தெளிவாக உரைக்கின்ற காட்சி தொகுப்பாக அமைந்துள்ளது. அவ்வாறு செயல்படுகின்ற பணியாளர்களை அவர்களது மன நிலை பாதிப்பதுபோன்று ஒரு சில காட்சிகளை வைத்துக்கொண்டு, இரண்டு ஊடகங்கள் தொடர்ந்து தாக்குதல்களை நடத்திக்கொண்டிருக்கிறார்கள்.

சமீபத்தில் ஒரு பேருந்திலிருந்து வயது முதிர்ந்த ஒருவரை நடத்துனர் தள்ளிவிடுகின்ற காட்சியில் அந்த முதியவர் தடுமாறிக் கீழே விழுந்துவிடுகிறார். அது தவறு. அந்தக் காட்சியில் ஏதோ அந்தப் பேருந்தில் அந்த நடத்துனர் பயணிக்க வருகின்றவர்களையெல்லாம் தாக்குவதுபோல் காட்சிபடுத்தப்பட்டிருந்தது. உண்மையில், அந்த முதியவர் கீழே நிற்கும்போதே அவரது இடுப்பிலிருந்த வேட்டி அவிழ்ந்து கீழே விழுவதுகூட தெரியாமல், நின்றுகொண்டிருந்தார். காரணம், அவர் அவ்வளவு போதையில் அந்தப் பேருந்தில் ஏறி, ஒரு பெண்ணின் அருகில் அமர்ந்து அந்தப் பெண்ணிற்கு தொல்லை கொடுத்த காரணத்தால், பயணிகள் அவரை கீழே இறக்கச் சொல்லியிருக்கிறார்கள். பயணிகள் இறக்கச் சொன்ன காரணத்தால், நடத்துனர் அவரை கீழே இறக்குகிறார். அது வரை யாருக்கும் தெரியாது. கீழே நின்றுகொண்டிருந்தவர், பேருந்து நின்ற பிறகு அதை தன்னுடைய அலைபேசியில் பதிவு செய்து, அதை அந்த ஊடகத்திற்குக் கொடுத்தவுடன் பேருந்தின் உள்ளே என்ன நடந்தது என்று தெரியாமல், வெளியே நடந்த காட்சிகளை வைத்து, பேருந்தில் பணியாற்றுகிறவர்களெல்லாம் தவறானவர்கள் என்பதுபோன்ற ஒரு காட்சி சித்தரிக்கப்பட்டது என்றால், அது மிகுந்த வருத்தத்திற்குரியது. 20,000 பேருந்துகள் ஓடுகின்றன.

இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும் இவ்வளவு பேருந்துகள் கிடையாது. அதில் கிட்டத்தட்ட 1 இலட்சத்திற்கும் மேற்பட்ட பணியாளர்கள் பணியாற்றுகின்றார்கள். தினந்தோறும் இரவு பகல் பாராமல் அவர்கள் பணியாற்றுகின்ற காரணத்தினால்தான், அந்தப் பேருந்துகள் சிறப்பான முறையில் இயங்குகின்றன. பேருந்து பணிமனைக்கு வருகின்ற ஒவ்வொரு பேருந்தையும் சரியாக இருக்கிறதா என்று பரிசோதித்துதான் அவர்கள் அந்தப் பேருந்துகளை வெளியே இயக்குகிறார்கள். அவ்வாறு வருகின்ற பேருந்துகள் சாலையில் இருக்கின்ற ஒரு ஆணி ஏறி puncture ஆகி நின்று tyre மாற்றுகின்ற காட்சியை கூட எடுத்துப் போட்டு, "tyre puncture ஆகி நிற்கிறது" என்று ஒரு செய்தியாக போடுவதென்றால், அது அத்துறையில் பணியாற்றுகின்றவர்களுக்கு மனச் சுமையை ஏற்படுத்தும், அவர்களுக்கு சங்கடத்தை ஏற்படுத்தும் என்பதை உணர வேண்டும் என்பதுதான் இந்த நேரத்தில் நான் வைக்கின்ற வேண்டுகோள். எனவே, இந்தத் துறை என்பது, மிகச் சிறப்பாக இயங்குகின்ற காரணத்தால்தான், இந்தத் துறையில் பணிபுரிகின்ற தொழிலாளர்கள் மிகச் சிறப்பாக இயக்குகின்ற காரணத்தால்தான், கடந்த காலங்களில் தீபாவளி, பொங்கல் போன்ற சிறப்புப் பண்டிகை நாட்களில் சிறப்புப் பேருந்துகள் இயக்கப்பட்டு, சென்னையிலிருந்து சொந்த ஊர்களுக்குச் செல்பவர்கள். மாவட்டங்களுக்குச் செல்பவர்களுக்கு சிறப்பான முறையில் பேருந்து சேவைகள் புரிந்துவந்தன. இப்பொழுது நீங்கள் தொடர்ந்து பார்க்கின்றீர்கள், தொலைக்காட்சிகளிலும், பத்திரிகைகளிலும் மாதத்திற்கொருமுறை சிறப்புப் பேருந்துகள் இயக்கம் என்று தொடர்ந்து அறிவிப்புகள் வருகின்றன. தொடர்ந்து 3 விடுமுறை நாட்கள் வந்தால், மக்கள் தங்கள் சொந்த ஊர்களுக்குச் செல்கின்ற நிலை இன்றைக்கு நிலவி வருகிறது. கொரோனா காலகட்டத்தில் தங்கள் சொந்த ஊர்களில் சென்று தங்கியவர்கள், இதுபோன்று தொடர் விடுமுறை கிடைக்கின்ற காலங்களில் தங்கள் சொந்த ஊர்களுக்குச் செல்கின்றவகையில் சிறப்புப் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. இருக்கின்ற பேருந்துகளைதான் துறையின்மூலம் சிறப்புப் பேருந்துகளாக இயக்க முடியும். இருக்கின்ற பணியாளர்களை வைத்துதான் அவற்றை இயக்க முடியும். அவர்களுக்கு இது கூடுதல் பணிச் சுமையையும் ஏற்றுக்கொண்டு, மனதார மகிழ்ச்சியோடு அந்த பயணிகளை அவர்கள் தேவைப்படும் நிறுத்தத்தில் கொண்டு சேர்க்கின்றார்கள் என்றால், இந்தத் துறையில் பணியாற்றுகின்றவர்கள் அந்த அளவில் அர்ப்பணிப்பு உணர்வோடு பணியாற்றுகின்றார்கள். அவர் ஓட்டுநராக இருந்தாலும், நடத்துனராக இருந்தாலும், கிளை மேலாளராக இருந்தாலும், பொறியாளராக இருந்தாலும், ஏன்? மேலாண்மை இயக்குநர்கள்கூட, விடியற்காலைவரை பேருந்து நிலையங்களில் நின்று, பேருந்துகள் சரியான முறையில் இயங்குகிறனவா என்று பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால், துறைச் செயலாளர் அவர்கள்கூட விடியற்காலை 4.00 மணிக்கு மேலாண்மை இயக்குநர்களை அழைத்து, பேருந்துகள் பிரச்சினை இல்லாமல் ஓடிக்கொண்டிருக்கின்றனவா என்று கேட்கின்ற அளவில் இந்தத் துறை செயல்பட்டுக்கொண்டிருக்கிறது.

## போக்குவரத்துத் துறையை எல்லா வகையிலும் சிறப்பாகக் கட்டமைத்தவர் கலைஞர்!

ஆனால், என்றைக்கோ எங்கோ ஒரு இடத்தில் ஒரு பிரச்சினை ஏற்பட்டதென்றால், அந்தப் பிரச்சினையைத் தொடர்ந்து பெரிதாக்கி, அதன்மூலமாக இந்தத் துறை சரியாக இயங்கவில்லையென்று மக்களிடத்தில் கொண்டு செல்ல நினைப்பதென்பது, ஏதோ ஒரு உள்நோக்கம் கொண்டதாக தெரிகிறது. எனவே, நான் அவர்களுக்கு சொல்வது, அந்த முயற்சிகளை கைவிடுங்கள், சிறப்பாக செயல்படுவதை நீங்கள் பாராட்டாவிட்டாலும் பரவாயில்லை, ஒரு நாள் நடக்கின்ற தவறினை ஒரு மாத காலத்திற்கு அதை பெரிதுபடுத்த வேண்டாமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். இந்தத் துறை சிறப்பாக இயங்குவதற்கு மகளிர் விடியல் பயணம் ஒரு மிகப் பெரிய காரணமாக இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த மகளிர் விடியல் பயணம்மூலமாக மகளிர் வாழ்க்கையில் எத்தகைய ஏற்றம் வந்திருக்கிறது என்பது மாநில திட்டக்குழு வெளியிட்ட ஓர் அறிக்கையின் மூலமாக வெளிப்பட்டது. இங்கே பேசிய உறுப்பினர் குறிப்பிட்டதைப் போல மகளிருக்கு மாதம் சுமார் 900 ரூபாயிலிருந்து 1000 ரூபாய் வரை மிச்சமாகிறது. அதேபோல, மகளிர் வாழ்க்கையில் கிடைத்த மறுமலர்ச்சிபோல, இந்த இயக்கம், இன்றைக்கு போக்குவரத்துக் கழகம் மிகப்பெரிய நிதிநெருக்கடியில் இருந்தாலும்கூட இந்தத் துறை இயங்குவதற்கு காரணம், முதலமைச்சர் அவர்கள் மகளிர் விடியல் பயணத்திற்கு வழங்குகின்ற தொகைதான் மிகப்பெரிய காரணமாக இருக்கிறது. சுற்றிலும் இருக்கிற மாநிலங்களில் போக்குவரத்து துறையில் பணிபுரிபவர்களுக்கு 3 மாதங்களுக்கு ஒரு முறைதான் சம்பளங்கள் வழங்கும் நிலை இருக்கிறது. ஆனால், நம்முடைய மாநிலத்தில் போக்குவரத்துத் துறையில் பணிபுரிபவர்களுக்கு மாதம் முதல்நாள் சம்பளம் வருகின்றது என்று சொன்னால், அதற்கு காரணம் முதலமைச்சர் அவர்கள் மகளிர் விடியல் பயணத்திற்கு வழங்குகின்ற தொகைதான். எப்படி அந்தத் தொகை மூலமாக இந்தத் துறை இயங்குகிறதோ, அதேபோல இப்போது இந்தத் துறையிலே புதிய பேருந்துகள் வாங்குவதற்கு முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து நிதி ஒதுக்கி புதியப் பேருந்துகள் வாங்குகின்ற பணி நடைபெறுகிறது. இங்கு உறுப்பினர் இரா. கருமாணிக்கம் கூட பழையப் பேருந்துகளை மாற்ற வேண்டும் என்று குறிப்பிட்டார். தொடர்ந்து புதியப் பேருந்துகள் வரும்போது அந்தப் பழையப் பேருந்துகள் மாற்றப்பட்டுக் கொண்டிருக்கிறது. 2022-2023 ஆம் நிதியாண்டில் ஆயிரம் புதியப் பேருந்துகள் கொள்முதல் செய்ய ரூ.421 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டதில் 291 பேருந்துகள் கட்டுமான நிலையிலும், 709 பேருந்துகள் மக்களின் பயன்பாட்டிற்கு வந்துள்ளன. அதேபோல 2023-2024-ல் ஆயிரம் புதியப் பேருந்துகள் கொள்முதல் செய்ய ரூ.446 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டதில், இதில் 638 பேருந்துகள் கட்டுமான நிலையில் உள்ளது. 362 பேருந்துகள் மக்களின் பயன்பாட்டிற்கு வந்துள்ளன.

அதேபோல ஊட்டியிலே SADP திட்டத்தின் மூலமாக 16 பேருந்துகள் கொள்முதல் செய்யப்பட்டு அவை மக்கள் பயன்பாட்டிற்கு வந்திருக்கிறது. 2024-2025 ஆம் ஆண்டு 3 ஆயிரம் புதியப் பேருந்துகள் கொள்முதல் செய்ய ரூ.1,535 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு 11-3-2024 அன்று ஒப்பந்தப்புள்ளி வெளியிடப்பட்டு, தொழில்நுட்ப மதிப்பீட்டிற்கு 9-7-2024 அன்று திறக்கப்பட உள்ளது.

ஜெர்மன் வளர்ச்சி வங்கி KfW நிதியுதவியோடு, 552 தாழ்தள நகரப் பேருந்துகளுக்கு 18-12-2023 அன்று ஒப்பந்தப்புள்ளி வழங்கப்பட்டு, கட்டுமானப் பணிகள் முடிக்கப்பட்டு அவை ராஜஸ்தான் மாநிலம் ஆழ்வாரில் அந்த பணிகள் நடைபெறுகிறது.

அந்தப் பேருந்துகள் ஜூலை மாதம் சென்னை மாநகரத்தில் மக்களுடைய பயன்பாட்டிற்கு வர இருக்கிறது. ஜெர்மன் வளர்ச்சி வங்கி நிதியுதவியுடன் 1,616 சாதாரண டீசல் பேருந்துகள் ஒப்பந்தப்புள்ளி கோர நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

ஜெர்மன் வளர்ச்சி வங்கி நிதியுதவியோடு 500 மின்சாரப் பேருந்துகளில் முதற்கட்டமாக 100 பேருந்துகளுக்கு 11-1-2024 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மீதம் உள்ள 400 மின்சாரப் பேருந்துகள் ஒப்பந்தப்புள்ளி கோர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. எனவே, மொத்தமுள்ள 7,682 பேருந்துகளில் இதுவரை 1,087 பேருந்துகள் மக்களின் பயன்பாட்டிற்கு வந்துள்ளன. மேலும், 929 புதியப் பேருந்துகள் கட்டுமான பணியிலும், 3,652 புதியப் பேருந்துகள் கொள்முதல் செய்ய ஒப்பந்தப்புள்ளி கோர மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இந்தப் பேருந்துகள் எல்லாம் மக்கள் பயன்பாட்டிற்கு வருகின்றபோது ஒரு 15 சதவிகித பேருந்துகள் தான் பழையப் பேருந்துகளாக இருக்கும். மீதிப் பேருந்துகள் புதியப் பேருந்துகளாக இருக்கும். கடந்த அ.இ.அ.தி.மு.க ஆட்சி, அவர்கள் ஆட்சியை விட்டு விலகுகின்றபோது 50 சதவிகிதம் பேருந்துகள் பழையப் பேருந்துகளை விட்டுவிட்டுச் சென்றனர். திராவிட முன்னேற்றக் கழகம் தலைவர் கலைஞர் அவர்கள் தலைமையில் ஆட்சியில் இருந்தபோது அமைச்சர் கே.என். நேரு அப்போது போக்குவரத்துத் துறை அமைச்சராக அப்போது இருந்தார்கள். 5 ஆண்டுகாலத்தில் 15 ஆயிரம் பேருந்துகள் வாங்கப்பட்டன. அ.தி.மு.க. ஆட்சியில் 10 ஆண்டுகாலத்தில் 14 ஆயிரம் பேருந்துகள்தான் வாங்கப்பட்டன. 5 ஆண்டுகள் வாங்கப்பட்ட பேருந்துகளின் எண்ணிக்கையை விட 10 ஆண்டுகள் குறைவான பேருந்துகள்தான் வாங்கப்பட்டன. அதனால்தான் அந்தப் பழையப் பேருந்துகள் மீண்டும் இயக்க நிலையில் இருக்கிறது. பேருந்தை முழுவதும் நிறுத்திவிட்டால் கிராம மக்கள் நகரத்திற்கு வருவதற்கு மிகவும் இடர்பாடுகளை சந்திக்க நேரிடும். தற்போது இருக்கின்ற பேருந்துகள் எல்லாம் பழையப் பேருந்துகள் என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அடிக்கடி பேசிக் கொண்டிருக்கிறார். அவர்தான் ஒரு பேருந்து எத்தனை ஆண்டுகாலம் இயக்கலாம் என்பது குறித்த ஓர் அரசாணையை வெளியிட்டிருக்கிறார்.

இன்றைக்கு அவர்கள் இருப்பார்கள் என்று, அவரிடம் கொடுக்கலாம் என்று இதுசம்பந்தப்பட்ட file எல்லாம் கொண்டு வந்தேன். இன்று அவர் வராமல் போய் விட்டார். பழையப் பேருந்துகள் இயங்குகின்றன, பழையப் பேருந்துகள் இயங்குகின்றன, என்று நேரம் கிடைக்கும்போதெல்லாம் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

சேலத்திலிருந்து அவர் சென்னை வரும்போது main road-ல் மஞ்சள் நிறப் பேருந்துகள் இயங்குவதை அவர் பார்க்கலாம். அத்தனையும் திராவிட மாடல் முதல்வர் அவர்கள் ஆட்சிக்கு வந்தப் பிறகு வாங்கப்பட்ட பேருந்துகள். (மேசையைத் தட்டும் ஒலி) அவருடைய திருக்கரங்களால், பொற்கரங்களால் துவக்கி வைக்கப்பட்ட பேருந்துகள். இந்தப் பேருந்துகள் எல்லாம் இயக்கத்திற்கு வந்திருக்கிற காரணத்தினால்தான் பல்வேறு இடர்பாடுகள் குறைந்திருக்கிறது. நான் எவ்வளவு பேருந்துகள் வாங்கப்பட்டன, எவ்வளவு பேருந்துகள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளன என்று நான் புள்ளி விவரங்களோடு விளக்கமளித்திருக்கிறேன். எனவே, மீண்டும், மீண்டும் இந்தக் குற்றசாட்டை வைக்க வேண்டாம்.

அதேபோல, உறுப்பினர் சின்னதுரை அவர்கள் இங்கு பல்வேறு கருத்துக்களை எடுத்து வைத்தார். அவர் சௌந்தரராஜன் அவர்களுடைய குரலாகத்தான் இங்கே ஒலித்ததாக எனக்குத் தெரிகிறது. போக்குவரத்துத் துறையிலே ஒப்பந்தப் பணியாளர்கள் பணிபுரிகிறார்கள் என்ற அந்த ஒரு குற்றச்சாட்டை தொடர்ந்து வைத்துக் கொண்டிருக்கிறார்கள். உறுப்பினர் நாகைமாலி அவர்கள்கூட கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார். உங்களுக்கு நான் அன்போடு தெரிவித்துக் கொள்கிறேன். அ.தி.மு.க. ஆட்சியிலே அதிக பணியாளர்களை, மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதா அவர்கள் எடுக்கவில்லை. எடப்பாடி பழனிசாமி அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, ஒரு நபரைக்கூட ஒட்டுநர், நடத்துநரை எடுக்கவில்லை. அதனால், இன்றைக்கு ஓய்வுபெறுகிறபோது,

அந்தக் காலிப் பணியிடங்கள் ஏற்படுகின்றன. காலிப் பணியிடங்களை நிரப்புவதற்கு அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்திலே 685 பேரை எடுப்பதற்கு அரசாணை வெளியிட்ட பிறகுதான், அந்த கோடை விடுமுறை நாட்களில் அதிகமாக இயங்குவது விரைவுப் போக்குவரத்துக் கழகம். எனவே, நீண்ட வெளியூர் பயணங்களை மேற்கொள்வார்கள் மக்கள். அந்த நேரத்திலே பேருந்தை ஓட்டுவதற்கு ஓட்டுநர், நடத்துநர் இல்லாத நிலை இருக்கக்கூடாது என்பதற்காகத்தான் ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டு, அதன்மூலமாக அவர்களை வைத்து அந்தப் பேருந்துகள் இயக்கப்பட்டன. அப்படி இயக்கப்பட்ட காரணத்தால், எந்தப் பிரச்சனையும் இல்லாமல் கோடை விடுமுறை சுமூகமாக முடிந்தது. இன்னும் சொல்லப்போனால், கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு கூடுதலாக வருவாய் அரசு விரைவு போக்குவரத்துக் கழகத்திற்கு கிடைத்தது.

இப்போது 685 பேருக்கு வேலைக்கு எடுப்பதற்கு எழுத்துத் தேர்வு முடிவுற்று, நேர்க்காணல் முடிவுற்று, ஓட்டுநர் திறனறிகின்ற பயிற்சி முடிவுற்று, அவர்கள் பணிக்கு வந்து விட்டார்கள். அவர்கள் பணிக்கு வந்த பிறகு, ஒப்பந்த முறையில் எடுக்கப்பட்ட அந்த பணியாளர்களெல்லாம் விலக்கிக்கொள்ளப்பட்டார்கள். எனவே, உங்களுக்கு எந்த சந்தேகமும் வேண்டாம். இது திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சி. சமூக நீதியைக் காக்கின்ற ஆட்சி. இன்னும் சொல்லப்போனால், இந்தப் போக்குவரத்துத் துறை என்பதனை நிர்மாணித்தவர் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள். அவர் நிர்மாணித்த காரணத்தினால்தான் இந்தளவுக்கு ஒரு பெரிய போக்குவரத்து நிறுவனமாக தமிழகத்தில் இருக்கிறது. எனவே, தலைவர் கலைஞர் நிர்மாணித்த இந்தப் போக்குவரத்துக் கழகத்தை நம்முடைய முதல்வர் அவர்கள் சிறப்பான முறையிலே கொண்டு செல்வார்.

### ஒப்பந்தப் பேச்சுவார்த்தை!

ஒப்பந்தமுறை தொழிலாளர்கள் என்பது ஒரு தற்காலிக ஏற்பாடு. அந்த தற்காலிக ஏற்பாடு இல்லாமல் நீங்களே பேருந்து வரவில்லை என எனக்கு phone செய்வீர்கள். அதை ஓட்டுவதற்கு அந்த ஓட்டுநர்களை தற்காலிகமாக நியமித்திருக்கிறோம். பணிநியமனம் செய்யப்பட்டு, புதிய ஓட்டுநர், நடத்துநர் வருகிறபோது, அவர்கள் விலக்கிக்கொள்ளப்படுவார்கள். எனவே, அந்த ஐயம் தேவையில்லை.

அதேபோல, புதிய ஒப்பந்தப் பேச்சுவார்த்தை நடத்த வேண்டுமென சின்னதுரை அவர்கள் சொன்னார்கள். அ.தி.மு.க. ஆட்சி வந்தபோது, 13 முறை ஒப்பந்தப் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு, முடிவு காணாமல், முடிவு எட்ட முடியாமல், மூன்றாண்டுகளுக்குள் முடிக்க வேண்டியதை அதைக்கடந்து ஒரு ஒன்றரை ஆண்டுகளும் அவர்கள் பேசி முடிக்காமல் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அமைந்த பிறகுதான், பேசி முடிக்கப்பட்டு, அந்த ஒப்பந்தம் மிகச்சிறப்பான முறையில் நிறைவேற்றப்பட்டது. அந்த ஒப்பந்தத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தொ.மு.ச. வைத்த கோரிக்கைகள், உங்கள் CITU வைத்த கோரிக்கைகள், AITUC வைத்த கோரிக்கைகள், INTUC வைத்த கோரிக்கைகளெல்லாம் பேசி சிறப்பான முறையிலே ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆனால், சௌந்தரராஜன் கையெழுத்து போடவில்லை. கையெழுத்து போடாமலே வந்து, மறுபடியும் ஒப்பந்தப் பேச்சுவார்த்தை கோருவதற்கு, அவர் ஏன் கோர வேண்டுமென்று எனக்குப் புரியவில்லை. ஒப்பந்தப் பேச்சுவார்த்தை பேசத்தான் போகிறோம். நடுவிலே நாடாளுமன்றத் தேர்தல், இந்த சட்டமன்றம் இருக்கிறது. இந்தப் பணிகளெல்லாம் முடிவுற்ற பிறகு, அதைப் பேசுவதற்கு தயாராக இருக்கிறோம் என்பதை நான் ஏற்கெனவே அவர்களுக்கு சொல்லியிருக்கிறேன். எனவே, அதில் எந்த ஐயமும் உங்களுக்குத் தேவையில்லை. உங்கள் கோரிக்கைகள் நிறைவேற்றப்படும். அதேபோல, . . .

சட்டமன்ற உறுப்பினர் இராம. கருமாணிக்கம் அவர்கள் ஒரு depot கேட்டார், RTO அலுவலகம் கேட்டார். நிதிநிலைமை காரணமாக இந்த ஆண்டு எதையும் அறிவிக்கவில்லை. அறிவிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். கிருஷ்ணராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் திருமதி க. சிவகாமசுந்தரி அவர்கள் இரண்டு வருடமாக depot கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஏனென்றால் அவர்கள் தொகுதியில் depot இல்லை. பக்கத்திலே இருக்கிற தொகுதியிலிருந்து 50 கி.மீ., 60 கி.மீ. பேருந்து வருகின்ற போது, நகரப்பேருந்துகள் இயக்க முடியாத சூழ்நிலை இருக்கிறதென்று சொல்லியிருக்கிறார். இன்னும் சொல்லப்போனால் அவர் நமக்குநாமே திட்டத்தில் நான் depot கட்டுவதற்கான நடவடிக்கை எடுக்கிறேன் என்று தெரிவித்திருக்கிறார். அதற்கான நடவடிக்கை எடுக்கின்றபோது, உரியமுறையில் ஆலோசித்து உங்களுக்கு பரிசீலிக்கப்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம். முருகன் அவர்கள் மினி பேருந்துகள் குறித்துப் பேசினார். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் இருக்கும்போது, கிராமப்புறத்து மக்களுக்கு சேவையாற்றுவதற்காக அந்த மினி பேருந்து திட்டம் கொண்டுவரப்பட்டது. கடந்த ஆட்சிக்காலங்களில் அவை முறையாக கவனிக்கப்படாததால், பலத்த சிரமமான சூழலுக்கு சென்று விட்டார்கள். நம்முடைய திராவிட மாடல் முதல்வர் அவர்களிடத்தில் அவர்கள் தொடர்ந்து கோரிக்கை வைத்ததன் அடிப்படையில், துறை ரீதியாக ஆய்வு செய்து, புதிய மினி பேருந்துகள் permit வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

அதுகுறித்து வரைவு அறிக்கை வெளியிடப்பட்டிருக்கிறது. இந்த ஒரு மாதத்திற்கு கருத்துக்கேட்பு. கருத்துக்களை வழங்குவதற்கான காலம் வழங்கப்பட்டிருக்கிறது. அதற்குப்பிறகு ஜூலை மாதத்திலே உள்துறை செயலாளர்கள் அவர்கள் தலைமையிலே கருத்துக்கேட்பு கூட்டம் நடக்க இருக்கிறது. அதற்கு பிறகு அந்தத் திட்டம் வடிவமைக்கப்பட்டு, மிக விரைவாக ஆகஸ்ட் அல்லது செப்டம்பர் மாதங்களில் நடைமுறைக்கு வரும். அப்பொழுது புதிய மினி பேருந்துகள் கிராமப்புறங்களில் இயக்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும். அதைப்போல, கடலூர் சட்டமன்ற உறுப்பினர் கோ. அய்யப்பன் அவர்கள், ஒரு மிகச்சிறப்பான செய்தியை சொன்னார். குறைந்த கட்டணத்தில் பக்கத்தில் இருக்கின்ற மாநிலங்களை விட, நம்முடைய மாநிலத்தில்தான் பேருந்துகள் இயங்குகிறது என்று. மிக நீண்ட நாட்களாக பேருந்துக் கட்டணத்தை உயர்த்தாமலே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஏழையெளிய மக்கள் மீது சுமையை இறக்கக்கூடாது என்கின்ற கொள்கை முடிவு வைத்திருக்கின்ற காரணத்தால் நாம் கட்டண உயர்வு இல்லாமல் இருக்கிறோம்.

ஆனால், பக்கத்தில் இருக்கக்கூடிய மாநிலங்களில் டீசல் விலை உயர்கின்றபோதெல்லாம் அரசு தலையிடாமல், அந்தப் போக்குவரத்துக் கழகங்களே கட்டண உயர்வை செய்துகொள்ளலாம் என்கின்ற ஒரு நிலை இருக்கின்ற காரணத்தால், அவர்கள் கட்டணத்தை உயர்த்தியிருக்கிறார்கள். அந்தச் சுமை இருந்தாலும், நம்முடைய முதலமைச்சர் அவர்கள், ஏழை மக்கள்மீது சுமை ஏற்படுத்தாமல், இந்தத் துறையை வழிநடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

**போக்குவரத்துத் துறை**

1. பேருந்தில் பயணம் செய்யும் பயணிகளின் பாதுகாப்பான பயணத்தை உறுதி செய்வதற்கு, தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களால் இயக்கப்படும் கதவு இல்லாத அனைத்து பேருந்துகளிலும், தானியங்கி கதவுகள் பொருத்துவது அவசியமாகிறது. இந்த கதவுகள் பாதுகாப்பு அரணாக செயல்பட்டு பேருந்து இயக்கத்தின் போது, பயணிகள் படிக்கட்டிலிருந்து விழுவது மற்றும் வெளிப்புற பொருட்களால் மோதுவது போன்ற விபத்துகள் முற்றிலும் தவிர்க்கப்படும். இத்திட்டத்தின்கீழ் 3886 பேருந்துகளுக்கு ரூ.15.54 கோடி செலவில் தானியங்கி கதவுகள் பொருத்தப்படும்.
2. தமிழ்நாடு அரசின் பூஜ்ஜிய விபத்துகள் இலக்கை அடைய, அனைத்து நகரப் பேருந்துகளின் இரு பக்கவாட்டிலும் பாதுகாப்பு அரண்கள் பொருத்தப்படும். இதனால் பயணிகள், பாதசாரிகள் மற்றும் இரு சக்கர வாகனத்தில் பயணிப்பவர்கள் பேருந்தின் பின்புற சக்கரங்களில் விழாமல் தடுத்து, உயிரிழப்பு மற்றும் பெரிய காயங்கள் ஏற்படுவது பெருமளவில் குறையும். இத்திட்டத்தின்கீழ் 8,771 பேருந்துகளுக்கு ரூ.8.77 கோடி செலவில் பாதுகாப்பு அரண்கள் பொருத்தப்படும்.



தொடர்ச்சி -14 ஆம் பக்கம்